விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 352 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 20 சனிக்கிழமை (06.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### அநுர அரசாங்கத்தின்
## 2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நிறைவேற்றம்

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு 157 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேறியது.

இதற்கு ஆதரவாக 158 வாக்குகளும் எதிராக 01 வாக்கும் கிடைத்தது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. எதிர்த்து வாக்களித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.பழைய பூங்காவில் அமையவுள்ள
## உள்ளக விளையாட்டரங்குக்கான பணிகளை உடனடியாக நிறுத்துக
### யாழ்.நீதிமன்றம் இடைக்காலத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அமைக்கப்படும் உள்ளக விளையாட்டரங்கின் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை கட்டளை வழங்கியுள்ளது.

குறித்த கட்டளையை உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு அனுப்பி வைக்குமாறும் மன்று உத்தரவிட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

# வீடு, காணி இழந்தவர்களுக்கு
# ரூ.1 கோடி உதவித் தொகை

### பாராளுமன்றில் ஜனாதிபதி அநுர உறுதி



(கொழும்பு)

- வீடுகளை மட்டும் இழந்தவர்களுக்கு ரூ.50 இலட்சம்.
- பகுதியளவில் வீடு சேதமடைந்தால் ரூ.25 இலட்சம்.
- உயிரிழந்த குடும்பங்களுக்கு ரூ.10 இலட்சம்.
- அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தால் 50 ஆயிரம் ரூபாய்.
- விலங்கு வேளாண்மை, கைத்தொழில் பாதிக்கப்பட்டிருந்தால் ரூ.2 இலட்சம்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## பேரிடரால் மரணித்தோர் 607 ஆக அதிகரிப்பு
### 214 பேர் மாயம்

(கொழும்பு)

டித்வா பேரிடர் காரணமாக மரணித்தோர் எண்ணிக்கை 607 ஆக அதிகரித்துள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

நேற்று மாலை 6 மணி வரையான நிலைவரப்படி பேரிடர் காரணமாக

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாநகர சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

யாழ்.மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் நேற்று யாழ். மாநகர சபையின் சபா மண்டபத்தில் முதல்வர் வி.மதிவதனியால் சபை அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க

### எலிக்காய்ச்சலுடன்
## கிளிநொச்சியில் ஒருவர் அடையாளம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் எலிக்காய்ச்சலுடன் நபர் ஒருவர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

### பேரிடரால் ஏற்பட்ட கழிவுகளை
## 3 வாரங்களுக்குள் சுத்தம் செய்ய வேண்டும்
### பிரதமர் ஹரிணி உத்தரவு



(கொழும்பு)

பேரிடர் சூழ்நிலையின் விளைவாக குவிந்துள்ள கழிவுகளை முறையாக அகற்ற வேண்டும் என்றும் அனைத்துத் துப்புரவுப் பணிகளும்

15ஆம் பக்கம் பார்க்க

## கனடாவில் கார் விபத்து
### யாழ்.இளைஞன் உயிரிழப்பு



(ஒட்டாவா)

கனடாவில் இடம்பெற்ற கார் விபத்தில் யாழ்ப்பாணத்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர்
### லண்டனில் குத்திக்கொலை
### திருமணம் செய்து ஒரு வருடமே



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் லண்டனில் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 3 ஆம்

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



திருமதி லோசனாராணி சிவசேகரம்
SLTS - I

அவர்களுக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்கள்

சேவைக்காலம்
27.11.1989 – 05.12.2025

கைதடி குருசாமி வித்தியாலயம்
12.02.2015 – 05.12.2025

Best Wishes..!

வாழ்த்துவோர் :
கைதடி குருசாமி வித்தியாலயத்தில் ஒன்றாக கடமையாற்றிய முன்னாள் அதிபர், ஆசிரிய நண்பர்கள்

(6074)

# வெள்ள நீரில் ஆபத்தான பயணம் ஓட்டுநர், நடத்துநர் இடைநீக்கம்

(கொழும்பு)

கும்புக்கனைப் பகுதியில் வெள்ள நீரைக் கடக்க முயன்றதன் மூலம் பயணிகளின் உயிருக்கு ஆபத்தை விளைவித்த மொனராகலை-கொழும்பு பேருந்து தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துள்ளது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கூற்றுப்படி, பேருந்தின் உரிமையாளர் மற்றும் ஊழியர்கள் கடந்த புதன் கிழமை ஆணையகத்தின் முன் வரவழைக்கப்பட்டனர்.

அவர்களின் தவறான நடத்தை குறித்த விசாரணையைத் தொடர்ந்து, பேருந்து வழித்தட அனுமதி இரண்டு வாரங்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், நடத்துநர் மற்றும் சாரதி ஆகியோர் ஒரு மாத காலத்திற்கு சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (நி)

# 22 உடன் விற்பனைக்கு 22


01. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் S.V.M களஞ்சியத்துக்கு முன்பாக 15 அடி அகலமும் 30 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும்
02. யாழ். பிறவுண் வீதியில் 3 பரப்புக் காணியும் 2 பரப்பு காணியும் 1 பரப்பு காணியும்
03. யாழ். கீரிப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 2 1/2 பரப்பில் அமைந்த வடக்கு வாசல் வீடும்
04. யாழ். ஸ்ரான்லி வீதியில் 2 கடையும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 723 2535

(C-4499)

# ஓராண்டு நினைவு நாள்

06.12.2025



அமரர் கந்தன் கதிரன் (சின்னையா)

எங்களின் குடும்ப விருட்சம்
சாய்ந்து போய் ஓராண்டானது
மங்காத ஒளி விளக்கு மாயமாய்
மறைந்த நாளிது சிங்கமாகக் கர்ஜிக்கும்
தங்கமான உள்ளம்
எங்கள் வாழ்வின் அசைக்க முடியாத நம்பிக்கை
கண்டிப்பான பேச்சு கவனமான செயல்
நடிக்கத் தெரியாத நல்லுள்ளம்
அழத்தெரியாத அன்புள்ளம்
அவரின் பாசம் பலாப்பழச் சுவை போன்றது
உங்களது ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணகம் 1948.08.16
விண்ணகம் 2024.11.17


கைதடி தெற்கு,
கைதடி

பிரிவுத் துயரில்,
குடும்பத்தினர்

(1766)

# மரண அறிவித்தல்

பிறப்பு 02 - 11 - 1952



இறப்பு 2025 - 11 - 30

## பொன்னையா பாலசிங்கம்

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாலசிங்கம் அவர்கள் கடந்த 30.11.2025 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - மாணிக்கம் தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பார்வதி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற கனகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசலெட்சுமி மற்றும் இரத்தினசிங்கம் சரஸ்வதி, இராசலிங்கம், கந்தசாமி காலஞ்சென்ற லலிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான குணலெட்சுமி, யோகலிங்கம் மற்றும் புஸ்பராசா, பேரின்பராணி, நகுலேஸ்வரன், தவராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் அனிதா(லண்டன்), துவாரகன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாகரன்(லண்டன்) அவர்களின் பாசமிகு மாமனாரும் அஞ்சனா, பிரணவறாம், பிரதிஜித்றாம் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2025) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆசாரி லேன்,
தாவடி.

தகவல் : குடும்பத்தினர்
076 225 3505

(6076)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் கணக்காளராகக் கடமையாற்றும் திருக்குமார் அவர்களின் அன்பு மனைவி

## அமரர் பிறேமினி திருக்குமார்

அவர்கள் கடந்த (04.12.2025) வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4998)

S.V.MURUGESU
154,HOSPITAL ROAD, JAFFNA.

தகவல்: உரிமையாளரும் ஊழியர்களும்

S.V.M Agency (PVT) LTD
154, Hospital Road, Jaffna.

S.V.M (PVT) LTD
122,DAM STREET, COLOMBO - 12

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நவக்கிரி மெயின் றோட்டுடன்**
**48 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் – புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியுடன்
- செம்மண் தரை, நிலப்பரப்பு, குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நிலாவரைக்கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 10 Km

(6077)

தொடர்பு :
**076 860 2770, 076 987 8617**

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் மானிப்பாய் நவாலியில்**
**7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- நவாலி அரசடிச் சந்தியிலிருந்து 250m தூரம்
- நவாலி மகா வித்தியாலயம் 250m தூரம்
- நவாலி கொத்துக்கட்டி வீதியில்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 15 லட்சம்.

(6077)

தொடர்பு :
**076 990 3039, 074 029 2338**


## இலங்கை வங்கி நிவாரணப்பணி





இலங்கை வாங்கியானது தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான தனது சமூகப் பொறுப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் நேற்று வடமாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக தமது நிவாரணப் பணிகளை முன்னெடுத்தது .

இப்பணியில் இலங்கை வங்கியின் தகவல் தொழில்நுட்ப நிர்வாகப் பிரிவின் தலைவர் என்.இராஜலிங்கம், இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் கே.ஐங்கரராஸ் மற்றும் இலங்கை வங்கியின் வடமாகாண பிரதேச முகாமையாளர்கள், சிரேஷ்ட முகாமையாளர்கள், கிளை முகாமையாளர்கள், ஊழியர்கள் ஆகியோர் இணைந்து தங்கள் பூரண பங்களிப்பினை வழங்கியிருந்தனர். (ம-7)

## பாராளுமன்ற உறுப்பினராக மொஹமட் தாஹீர் பதவியேற்பு



(கொழும்பு)


அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நைனா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹிர் நேற்றுப் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றார்.

நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன முன்னிலையில் அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் இஸ்மாயில் முத்து மொஹமட் தனது பதவியை அண்மையில் இராஜினாமா செய்தார்.

இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளரினால் நைனா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹிரின் பெயர் தேர்தல் ஆணைக்குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## சண்முகம் கனகராசா

தச்சன் தோப்பு கைதடியைப் பிறப்பிடமாகவும் 27/7 வைமன் வீதி நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கனகராசா அவர்கள் நேற்று (05.12.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சண்முகம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராசபூபதி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா, கந்தசாமி, ஆனந்தராஜா, தங்கராசா மற்றும் முத்துமலர், தங்கமலர் ஆகியோரின் சகோதரனும் ரூபதாஸ், ரூபஜானகி, கிருபதாஸ் (ரூபி நகைமாடம் - திருநெல்வேலி, ஸ்ரீமுருகன் நகைப்பூங்கா - பூநகரி), கண்ணதாஸ் (ரூபி நகை மாளிகை - கொடிகாமம், JKR நகை மாளிகை - சாவகச்சேரி), ரூபரஞ்சினி ஆகியோரின் தந்தையும் லதா, ஜெயமெலநியூஸ், சந்திரா, தேனுஜா, அம்பிகைகுமார் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான மகேந்திரராஜா, யோகானந்தராஜா ஆகியோரின் மைத்துனரும் தர்சிகா, லிசானி, கோகுலதாஸ், அக்ஷயன், டினோஜா, ஷாருஜா, கபிஷாளினி, நிவேதிகன், அபிலக்சன், ஆதர்பிகா, ஆர்மிகன், அக்ஷரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை வைமன் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27/7, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(6078)

தகவல் : குடும்பத்தினர்
077 990 5819, 077 617 3046

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை மீளக் கட்டியெழும்பும் நிதியத்திற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் 30 கோடி ரூபாய் நன்கொடை

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிக்கும் குறிக்கோளுடன் இலங்கை அரசாங்கம் ஆரம்பித்துள்ள "இலங்கையை மீண்டும் கட்டியெழுப்பும்" நிதியத்திற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் 30 கோடி ரூபாவை நன்கொடையாக வழங்க தீர்மானித்துள்ளது.


ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் நிறைவேற்றுக் குழுவினரின் ஆலோசனைக்கு அமைய இந்த நிதி உதவியை வழங்க ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

மில்லியன் கணக்கான இலங்கையர்களால் நேசிக்கப்படும் தேசிய கிரிக்கெட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் ஆழமான பொறுப்புணர்வை இந்த உதவி பிரதிபலிக்கிறது.

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசர நிவாரணம் வழங்குவதிலும், பாதிக்கப்பட்ட சமூகங்களின் அன்றாட வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப தேவையான அத்தியாவசிய பொதுச் சேவைகளை இயல்பு நிலை க்கு கொண்டு வருவதிலும் இந்த பங்களிப்பு அரசாங்கத்திற்கு உதவும் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் நம்புகிறது.

மேலும், தேசத்தின் முன்னேற்றத்திற்கான அதன் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தொடர்ந்தும் நாட்டிற்கு துணைநிற்கும் எனவும் அவசியம் ஏற்படும் போதெல்லாம் அதன் ஆதரவை வழங்கும் எனவும் அதன் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் நிறைவேற்றுக் குழுவினர் மீண்டும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மிட்செல் ஸ்டார்க் புதிய சாதனை



அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் பெர்த்தில் நடந்த முதலாவது டெஸ்டில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக் கில் முன்னிலை வகிக்கிறது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் பகல்-இரவு போட்டியாக பிரிஸ் பேனில் நேற்று முன்தினம் தொடங் கியது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆட்ட நேர முடிவில் முதல் இன்னிங்சில் 74 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 325 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ஜோ ரூட் 135 ஓட்டங்களுடனும், ஜோப்ரா ஆர்ச்சர் 32 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். அவுஸ்திரே லிய தரப்பில் இடக்கை வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் 6 விக்கெட்டுகளை அள்ளினார்.

இடக்கை வேகப்பந்து வீச்சாள ரான மிட்செல் ஸ்டார்க் இந்த இன்னிங்சில் வீழ்த்தியுள்ள 6 விக்கெட்டுகளையும் சேர்த்து டெஸ் டில் அவரது விக்கெட் எண்ணிக்கை 418 ஆக உயர்ந்தது. இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட் வீழ்த்திய இடக்கை வேகப்பந்து வீச்சாளர் என்ற புதிய சாதனையை படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் பாகிஸ்தானின் வாசிம் அக்ரம் 414 விக்கெட்டுகளுடன் முதலிடத்தில் இருந்தார். தற்போது அவரை முந்தி மிட்செல் ஸ்டார்க் புதிய சாதனை படைத்துள்ளார். (3)

## இந்தியாவிற்கு எதிரான ஒருநாள் தொடரை சமப்படுத்திய தென்னாபிரிக்கா

### இறுதிப் போட்டி இன்று



இந்திய- தென்னாபிரிக்கா இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி ராஞ்சியில் நடைபெற்றது. அதில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2 ஆவது போட்டி ராய்ப்பூரில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா அணி பந்து வீச்சைத் தேர்வு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய இந்திய அணி 50 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 358 ஓட்டங்கள் குவித்தது. இந்திய அணி தரப்பில் அதிகபட்சமாக ருதுராஜ் 105 ஓட்டங்களும்விராட்கோலி 102 ஓட்டங்களும் கே.எல். ராகுல் 66 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதையடுத்து 359 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி நிதானமாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தது.

தொடக்க ஆட்டக்காரரான மார்க்ரம் 98 பந்துகளில் 110 ஓட்டங்கள் விளாசி ஆட்டமிழந்தார். பொறுப்புடன் ஆடிய பவுமா 46 ஓட்டங்க ளிலும் அதிரடியாக விளையாடிய ப்ரேவிஸ் 54 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

நிதானமாக விளையாடிய ப்ரீட்ஸ்கி 68 ஓட்டங்களில் ஆட்டமிழக்க அடுத்ததாக களமிறங்கிய போஸ் பொறுப்புடன் விளையாடி அணியை வெற்றியை நோக்கி அழைத்து சென்றார்.

49.2ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 362 ஓட்டங்கள் எடுத்து தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இந் நிலையில் 3 ஆவது மற்றும் இறுதி ஒருநாள் போட்டி இன்று விசாகப்பட்டனத்தில் நடைபெறவுள்ளது. இதில் வெற்றி பெறும் அணி தொடரைக் கைப்பற்றும். (3)

## வீடு, காணி...

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட பேரிடரால் 5,165 வீடுகள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. 55,747 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 1.7 மில்லியன் மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

வீடுகளை முற்றுமுழுதாக இழந்தவர்களுக்கு 50 இலட்சத்தை வழங்கவுள்ளோம். காணிகள் தொடர்பாகவும் கணக்கெடுப்பு விரைவில் நடத்தப்படும். அவர்களுக்கும் 50 இலட்சத்தை வழங்கவுள்ளோம்.

காணி மற்றும் வீடு இரண்டையும் இழந்தவர்களுக்கு சரியாக ஆராய்ந்து ஒரு கோடி ரூபா வழங்கப்படும். வீடுகளை பகுதியளவில், இழந்தவர்களுக்கு மறுசீரமைப்பு அடிப்படையில் 25 இலட்சம் ரூபாவை 4 தவனைகளில் வழங்கவுள்ளோம்.

தகரம் இல்லாது போயிருந்தால் கூட 10 இலட்சம் வழங்கப்படும். முன்னர் போல 2000ரூபா வழங்குவதால் என்ன பயன்?

மரணித்தவர்களுக்கு 10 இலட்சம் உறவினர்களிடத்தில் வழங்கப்படும். உயிரிழந்தவர்களுக்கு பெறுமதியை வழங்கமுடியாது. இருந்தாலும் இந்த மக்களின் வாழ்க்கையை சீரமைப்பதை விட வேறு எதுவும் முக்கிய விடயம் அல்ல.

மண்சரிவால் பாதிக்கப்பட்டு முகாம்களில் வாழ்பவர்கள் வாடகை வீட்டில் வசிப்பதற்கு மூன்று மாதத்துக்கு 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும். குடும்பத்தில் இரண்டு பேருக்கு மேற்பட்டவர்கள் இருப்பார்களாயின் 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

விவசாய உற்பத்தியை மேம்படுத்த ஒரு ஏக்கர் நிலத்துக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். அழிவடைந்துள்ள 1 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பும் மீண்டும் விவசாய நிலமாக மாற்றப்படும்.

அதேபோல் மரக்கறி உற்பத்திக்கு 1 ஏக்கர் நிலத்துக்கு 2 இலட்சம் ரூபா வழங்கப்படும்.

பாதிக்கப்பட்டுள்ள விலங்கு வேளாண்மையில் ஈடுபடுபவர்களுக்கு 2 இலட்சம் ரூபா வழங்கப்படும்.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு 2 இலட்சம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும்.

வங்கி அடிப்படையில் தொழில் முயற்சியாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். அதற்குரிய சுற்றறிக்கையை மத்திய வங்கி வெளியிடும்.

காப்புறுதி நிறுவனங்களும் நிவாரணம் வழங்கும் அதற்குரிய அறிவுறுத்தல்கள் வெளியிடப்படும்.பதிவு செய்யப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகள் முழுமையாக சேதமடைந்திருந்தால் ஒரு படகுக்கு தலா 4 இலட்சம் ரூபா வழங்கப்படும்.

பாடசாலை மாணவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அஸ்வெசும திட்டத்தின் ஊடாக 6 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். எமது மாணவர்களுக்கு நாங்கள் வழங்குவோம். கல்விக்கான நிதி செலவல்ல, அது சிறந்த முதலீடு.

வர்த்தக கட்டிடங்கள் சேதமடைந்திருந்தால் மதிப்பீடுகளுக்கு அமைய 50 இலட்சம் ரூபா வழங்கப்படும் என்றார்.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்களின் ஒற்றுமையால் இலங்கை வேகமாக மீண்டு வருகிறது

(கொழும்பு)

அதீத வானிலையால் ஏற் பட்ட அனர்த்தங்களில் பாரிய பேரழிவுகள் ஏற்பட்ட போதும், நாட்டு மக்களின் அசைக்க முடி யாத மன வலிமை மற்றும் ஒற்றுமையால் இலங்கை வேகமாக மீண்டு வருவதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிக்கின்றார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அனர்த்தக் காலப்பகுதியி லும் நாட்டிற்கு வருகை தந்து ள்ள சர்வதேச பிரதிநிதிகளுக்கு் நன்றி தெரிவித்த பிரதமர், அவர்களின் வருகை, இலங்கையின் ஸ்திரத்தன்மைக்கும் மீள் கட்டுமானத்திற்கும் பலம் சேர்த்திருப்பதாக தெரிவித்தார்.

மீள்குடியேற்றம், அனர்த் தங்களை எதிர்கொள்வதற் கான ஆயத்தங்களை வலுப்ப டுத்துதல், வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகளைப் புனரமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய மறுசீரமைப்புப் பணிகளை வழிநடத்த, உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் தெரிவித்துள்ளார். இதற்காகக் குறுகிய கால மற்றும் நீண்ட கால மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (நி)


## வேலைவாய்ப்பு

**EVENT COORDINATOR**

- யாழ். மாவட்டத்தின் உயர்கல்வி நிறுவனம் ஒன்றிற்கு குறுகிய கால அடிப்படையில் பணியாற்றக்கூடியவர்.
- அதிபர்கள், ஆசிரியர்கள், அரச நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடியவர்.
- சம்பளம், போக்குவரத்து கொடுப்பனவுகள் வழங்கப்படும்

சுயவிபரக் கோவையை பின்வரும் இலக்கத்திற்கு whatsapp செய்யவும்.

**077 343 6927**

(C-352)


# பயன்படுத்த முடியாத நாணயத்தாள்களை வணிக வங்கிகளில் சமர்ப்பிக்கலாம்


## இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடர் சூழ்நிலையை அடுத்து, ஈரமான அல்லது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நாணயத்தாள்களை எவ்வாறு பாதுகாப்பாகக் கையாள்வது என்பது குறித்த பொதுமக்களுக்கான வழிகாட்டுதலை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

மத்திய வங்கியின் கூற்றுப்படி, குடிமக்கள் நனைந்த தாள்களை உலர்த்துவதற்கு அல்லது கட்டுக்களில் இருந்து பிரிப்பதற்கு சூடான நீர், சலவைத்தூள் அல்லது இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பயன்படுத்த முடியாத ரூபாய் நோட்டுகளை மாற்றுவதற்காக எந்தவொரு வணிக வங்கியிலும் அவற்றை சமர்ப்



பிக்கலாம்.

சேதமடைந்த நாணயத்தின் மதிப்பைப் பாதுகாப்பதும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு முயற்சிகளை ஆதரிப்பதும் இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


## கண்ணீர் அஞ்சலி



திருமதி பிறேமினி திருக்குமார்

(யாழ்.கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்)

எமது கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகரும் எமது பாடசாலை வலயப் பிரதிநிதியுமான திருமதி பிறேமினி திருக்குமார் அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(1765)

பாடசாலைச் சமூகம்
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்


## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3342

**தேவிக்கா**




**மது**




**சுதா**




**ரிஷானி**




**கஜித்தா**




**மனோ**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாத இராசி பலன்கள்

## மனதில் உற்சாகம் அதிகரிக்கும் சிம்ம இராசியினரே!



**கிரகநிலை-** ராசியில் கேது - தைரிய வீரிய ஸ்தானத்தில் புதன் - சுக ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - களத்திர ஸ்தானத்தில் சனி, ராகு - அஷ்டம ஸ்தானத்தில் சந்திரன் - அயன சயன போக ஸ்தானத்தில் குரு (வ) என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** எதற்கும் கலக்கமோ, அதிர்ச்சியோ அடையாத சிம்ம இராசியினரே நீங்கள் வசீகர பேச்சாற்றல் கொண்டவர். இந்த மாதம் எல்லா வகையிலும் நல்ல பலன்கள் உண்டாகும். எதிர் பாராத சம்பவங்களால் இழுபறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். உடல் ஆரோக்கியம் மனதில் உற்சாகத்தை தரும். அவ்வப்போது ஏதாவது தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சற்று கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.

கடன் பிரச்சனைகள் குறையும். போட்டிகள் நீங்கும். வரவேண்டிய பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகஸ்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். திறமையான செயல்கள் மூலம் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் தீரும் எதை பற்றியும் கவலைப்படாமல் நினைத்த காரியத்தை செய்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கு இடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகளுக்காக பாடுபடுவீர்கள். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் கௌரவம் கூடும். பெண்களுக்கு இழுபறியாக இருந்த பிரச்சினைகள் சாதகமான முடிவு பெறும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும்.

அரசியல்வாதிகளுக்கு சங்கடங்கள் குறையத் தொடங்கும். எதிர் கட்சியினர் உங்களைப் பற்றிக் குறை சொல்வதைக் குறைத்துக் கொள்வார்கள். தொண்டர்கள் உங்கள் பெருமைகளைப் புரிந்து கொள்வார்கள். கட்சி மேலிடத்தின் ஆதரவுடன் மனதிற்கினிய பொறுப்புகளைப் பெறுவீர்கள். கலைத் துறையினருக்கு திறமைக்கேற்ற புகழும், கௌரவமும் கட்டாயம் கிடைக்கும். பண வரவில் முன்னேற்றம் உண்டாகும். நண்பர்கள் மூலம் தக்க சமயத்தில் தேவையான உதவிகளைப் பெறுவீர்கள். அமைதியாகச் செயலாற்றுவீர்கள்.




மாணவர்களுக்கு கூடுதல் மதிப்பெண் பெற அதிகமாக படிக்க வேண்டி இருக்கும். கல்வி தொடர்பான பிரச்சினைகள் குறையும். தேவையான உதவி கிடைக்கும்.

**மகம்:** இந்த மாதம் சுக்கிரன் சஞ்சாரத்தால் கலைத்துறைகளைச் சார்ந்த துறைகளில் ஈடுபட்டு இருப்பவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கப் பெறுவீர்கள். பிறமொழி பேசுபவர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**பூரம்:** இந்த மாதம் உங்கள் நிலைமை மாறும். நீங்கள் விரும்பியதை கேட்டு பெற்றுக்கொள்ளலாம். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். கன்சல்டன்சி துறைகளில் வேலை செய்பவர்களுக்கு தகுந்த முன்னேற்றம் கிடைக்கும். பள்ளி, கல்லூரிகளில் பணிபுரிபவர்களும் நற்பலன்கள் கிடைக்கப் பெறுவார்கள். பதவி உயர்வு கிடைக்கும்.


**உத்திரம் 1ஆம் பாதம்:** இந்த மாதம் அலைச்சல் இருக்கும். சிலர் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாட வேண்டிய நிலை ஏற்படலாம். உங்கள் குழந்தைகளால் சிற்சில பிரச்சினைகள் வரலாம். அதற்காக உங்களின் குழந்தைகள் மேல் ஆத்திரம் கொள்ள வேண்டாம். உத்தியோகத்தர்கள் வேலையில் வரும் கஷ்டங்களை தாங்கிக் கொள்ளுங்கள்.

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமையில் சிவசூரியனை தீபம் ஏற்றி வழிபட்டு வர கடன் பிரச்சனை குறையும். முன்னேற தேவையான உதவிகள் கிடைக்கும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 1, 27, 28

**அதிஷ்ட தினங்கள்:** 20, 21

## எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும் கன்னி இராசியினரே!



**கிரகநிலை-** தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் புதன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி, ராகு - களத்திர ஸ்தானத்தில் சந்திரன் - லாப ஸ்தானத்தில் குரு (வ) - அயன சயன போக ஸ்தானத்தில் கேது என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** சாந்தமும், அமைதியும் உடைய கன்னி இராசியினரே இந்த மாதம் எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். உங்களது எண்ணப்படியே எதையும் செய்து முடிக்கும் சூழ்நிலை ஏற்படும். மற்றவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் நாட்டம் செல்லும். கௌரவம் அந்தஸ்து உயரும். வீண் செலவுகள் உண்டாகும்.

தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் தங்களது தொழிலில் விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். அதற்கு தேவையான பண உதவியும் கிடைக்க பெறுவீர்கள். ஆனால் போட்டிகள் பற்றிய கவலைகள் தோன்றும். சமாளிக்க முயல்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது திறமையால் அலுவலக பணியை சிறப்பாக செய்வார்கள். புதிய தொடர்புகள் மகிழ்ச்சியை தருவதாக இருக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறும். மனைவி குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதை கழிப்பீர்கள். ஆன்மீக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். வாகன லாபம் ஏற்படும். தகப்பனாருடன் வீண்வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. வெளி தொடர்புகளில் எச்சரிக்கை தேவை.

பெண்கள் எண்ணப்படி காரியங்களை செய்து முடிக்க சூழ்நிலை ஏற்படும். செலவுகளை குறைக்க திட்டமிடுவது நல்லது. கௌரவம் உயரும். கலைத்துறையினர் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் நிறைவேறும் சூழ்நிலை உருவாகும்.

அரசியல் துறையினர் ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். தேவையான நிதியுதவி கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பணிசுமை குறைந்து காணப்படும். நிலுவையில் இருந்த பணம் கிடைக்கும். மேலிடத்திற்கு தேவையானவற்றை செய்து கொடுத்து அவர்களது நன்மதிப்பை பெறுவீர்கள். மாணவர்களுக்கு பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை அவ்வப்போது போக்கிக் கொள்வது நல்லது. திட்டமிட்டு செயலாற்றுவது முன்னேற்றத்திற்கு உதவும்.




**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் அன்பும் பாசமும் அதிகரிக்கும். கருத்துக்களை பரிமாறும் முன் பொறுமை மற்றும் நிதானம் அவசியம் என்பதை உணருங்கள். திருமணமாகாமல் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு திருமணம் இனிதே நடந்தேறும். புதிதாக வீடு, மனை வாங்க வேண்டும் என்று யோசனை செய்தவர்களின் எண்ணம் ஈடேறும்.

**அஸ்தம்:** இந்த மாதம் மிகவும் விரும்பிய நண்பர்களை விட்டுப் பிரிய வேண்டிய நிலை வரலாம். உங்களின் பொருட்களை மிகவும் கவனமாக பார்த்துக் கொள்ளவும். தூக்கம் இல்லாமல் தவிக்கும் நிலையில் உள்ளவர்களுக்கு யோகா போன்ற பயிற்சிகளை செய்வது நன்மையைத் தரும்.

**சித்திரை 1, 2ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தாய்மாமனிடம் கருத்து மோதல்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகமான உழைப்பினை கொடுக்க வேண்டி வரலாம். வேலையை கவனத்துடன் செய்வது நல்லது.

**பரிகாரம்:** புதன்கிழமையில் நவ கிரகத்தில் புதனுக்கு பால் அபிஷேகம் செய்து தீபம் ஏற்றி வணங்கி வருவது புத்தி சாதுரியத்தை தரும். சிக்கலான பிரச்சினைகளையும் எளிதாக தீர்ப்பீர்கள்.

**சந்திராஷ்டம தினங்கள்: 2, 3, 29, 30.**

**அதிஷ்ட தினங்கள்: 22, 23, 24**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான இடங்களில் மீள் குடியேற்றம்

## அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

**இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் பழைய இருப்பிடங்களில் மீளக் குடிய மர்த்துவதற்குப் பதிலாக, பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துவது குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி யுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்றத்தில் இன்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் இது தொடர்பாக மாவட்ட செயலாளர்கள் மற் றும் பிரதேச செயலாளர்களு க்கு அரசாங்கம் அறிவுறுத்தல் களை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(நி)

# நீர்ப்பாசனத்துறையை மீளக்கட்டியெழுப்புமாறு பணிப்பு

(கொழும்பு)

கமத்தொழில், கால்நடை வளங்கள் மற்றும் நீர்ப்பா சனத்துறைக்கு ஏற்பட்டு ள்ள சேதங்கள் மற்றும் அவற்றை மீளக் கட்டியெ ழுப்ப எடுக்க வேண்டிய துரித நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல், நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதி பதி அநுரகுமார திஸா நாயக்க தலைமையில் விவசாய அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் அதி காரிகளின் பங்கேற்புடன் நடைபெற்றது.

நாட்டைப் பாதித்த சீரற்ற காலநிலை காரணமாக நெல், சோளம், தானியங் கள் மற்றும் மரக்கறிப் பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்பட் டுள்ள சேதம் தொடர் பில் கிடைத்துள்ள தரவு கள் மற்றும் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கான இழப் பீடு வழங்கும் நடவடிக்கை களைத் துரிதப்படுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

கால்நடைகள் மற்றும் நீர்ப்பாசனத் துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், நீர்ப் பாசனக் கட்டமைக்கு ஏற் பட்டுள்ள சேதங்களை மதிப் பிட்டு, அவற்றை விரைவில் மீளக்கட்டியெழுப்ப வேண்டி யதன் அவசியத்தை சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, அதற் கான வேலைத் திட்டங் களைத் தயாரிக்குமாறும் அதிகாரிகளுக்கு அறி வுறுத்தினார். (நி)

# பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ள விரைவில் நடவடிக்கை

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர்களாக நியமிப்பதற்கு தடை யாக இருந்த நீதிமன்ற வழக்கு நிறைவ டைந்துள்ள நிலையில், விரைவில் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமரும் கல்விய மைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரி வித்துள்ளார்.

அந்தவகையில் வயதெல்லை திருத்தம் செய்யப்பட்டு பரீட்சையை நடத்தி பட்டதாரிகளை ஆசிரியர் சேவை யில் இணைத்துக் கொள்வதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டி னார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய் மூல விடைக்கான வினாக்கள் வேளையில் பாராளுமன்ற உறுப்பினர் சந்தன. சூரிய ஆரச்சி எழுப்பிய கேள் விக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார். (நி)

# மிஞ்சியது 'செல்பி' புகைப்படம் மட்டுமே

(கொழும்பு)

இயற்கை எம்மை மிகவும் விசித்திரமான முறையில் தண் டிக்கிறது. "டித்வா" வும் அவ் வாறே, இன்னும் பல வருடங் களுக்கு மக்கள் தலைநிமிர முடி யாத அளவுக்கு தண்டித்துவிட்டுச் சென்றிருக்கிறது.



இலங்கை அண்மைக்கால வரலாற்றில் இல்லாதவாறான ஒரு அனர்த்தத்தை இம்முறை எதிர்கொண்டதுடன், அதன் காரணமாக பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன.

அத்துடன், யாரிடமும் கையேந்தாமல் வாழ்ந்த இன்னும் பலரை நிர்க்கதியாக் கியது. அவ்வாறு அநாதரவான மக்க ளுள் தனது பெற்றோரின் மகிழ்ச்சிக்காக கஷ்டப்பட்டு முன்னேறிய நிமேஷும் ஒரு வர்ாவார்.

நிமேஷ் விக்ரமரத்ன, மாவனெ ல்லை - அரநாயக்க பிரதேசத்திலுள்ள அம்பலங்கந்தையில் வசித்து வந்தார்.

அவர் தொழிலால் ஒரு வர்ணப்பூச்சு கலைஞர். சிறிய அளவில் தொழில் பயணத்தை ஆரம்பித்த அவர், பெரும் பயணமொன்றை முன்னெடுத்துச் சென்றுகொண்டிருந்தார்.

தனது பெற்றோரின் மகிழ்ச்சிக்காக அவர்கள் வசித்த வீட்டை அழகாக நிர்மாணிப்பதே நிமேஷின் ஒரே குறிக் கோளாக இருந்தது. அதனை அவர் நனவாக்கினார்.

எவ்வாறாயினும், அவை அனைத் தும் ஒரு கணத்தில் துகள்களாகச் சிதறின. தனது கடின உழைப்பால் கட்டியெழுப்பிய வீட்டில் இறுதியில் அவருக்கு எஞ்சியது "செல்பி" புகைப் படம் மட்டுமே.

தற்போது பாடசாலையொன்றில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மையத் தில் தங்கியிருக்கும் நிமேஷ், தனது வேதனை தாளாமல் வீட்டின் அன்றைய மற்றும் இன்றைய நிலையை தனது "பேஸ்புக்". கணக்கில் பதிவிட்டுள் ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995 – RC
நட்சத்திரம்: சுவாதி
6இல்சூரிசெவ்
கி-பா 14 உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Media course, London
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/16286

பிறப்பு: 1994 - இந்து
நட்சத்திரம்: சதயம்
கி-பா-22 உயரம்: 6"
தகைமை/தொழில்: A/L, Swiss
எதிர்பார்ப்பு - தகுதியான பெண்
தொ.இ: B/16288

பிறப்பு:1990 - இந்து
நட்சத் திரம்: பூரம்
2இல் செவ்
கிபா- 34 உயரம்: 6'1"
தகைமை/தொழில்: BSC(QS),QS
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16290

பிறப்பு :1991 - இந்து
நட்சத்திரம்: பூராடம்
10இல் சூரிசெவ்
உயரம் : 5'4"
தகைமை/தொழில்: Sales Assistance
எதிர்பார்ப்பு - தகுதியான பெண்
தொ.இ: B/16291

பிறப்பு:1979 -இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 23
உயரம் :5'7"
தகைமை/தொழில்- HNDA.பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/16292

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996 - இந்து
நட்சத்திரம்: விசாகம்
8இல்செவ்
கி.பா: 38 3/4 உயரம்: 5'5"
தகைமை/தொழில்-: BSC, AAT, MBA, Accountant
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16204

பிறப்பு -2002 - இந்து
நட்சத்திரம்:உத்தரம்
8இல்செவ் உயரம்: 5'2"
தகைமை/தொழில்-BSC,MSC, Labwork (London)
எதிர்பார்ப்பு - : பட்டதாரி
தொ.இ: G/16207

பிறப்பு - 1997 - இந்து
நட்சத்திரம்: சித்திரை
கிபா- 38
உயரம் : 5'6"
தகைமை/தொழில்: College, BSc, Teacher
எதிர்பார்ப்பு - தகுதியான ஆண்
தொ.இ: G/16208

பிறப்பு -1998 - இந்து
நட்சத்திரம்: திருவோணம்
2 இல் செவ் கி-பா:57
உயரம்: 5'4"
தகைமை/தொழில்- A/L,Cashier
எதிர்பார்ப்பு - வெளிநாடு
தொ.இ: G/16212

பிறப்பு-1999 - இந்து
நட்சத்திரம்: ரேவதி
2இல்செவ்
கிபா-18 உயரம் : 5'1"
தகைமை/தொழில்:BSC,Engineer
எதிர்பார்ப்பு - தகுதியான ஆண்
தொ.இ:G/16213

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# இந்தியா நடுநிலையானது அல்ல

# அது எப்போதும் அமைதியின் பக்கம்



(டில்லி)

**இந்தியா நடுநிலையானது அல்ல என்று நான் எப்போதும் கூறுவேன். இந்தியாவுக்கு ஒரு பக்கம் இருக்கிறது, அந்தப் பக்கம் அமைதி. அமைதிக்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் ஆதரிக்கிறோம். அமைதிக்கான அனைத்து முயற்சிகளிலும் நாங்கள் தோளோடு தோள் நிற்கிறோம் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.**




இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனான கலந்துரையாடலின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொ்விட் முதல் இன்று வரை, உலகம் பல நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது.

மிக விரைவில், உலகம் கவலைகளிலிருந்து விடுபட்டு, உலக சமூகத்திற்கு சரியான திசையில் ஒரு புதிய நம்பிக்கை எழும் என்று நாங்கள் நம்புகிறோம் என அவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்தியா - ரஷ்யா இடையிலான வர்த்தகம், இராணுவத் தளவாடம், உக்ரைன் போர் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

## குடியேற்றத்திற்காக விண்ணப்பிக்க 19 நாடுகளுக்கு தடை விதிப்பு



(வோஷிங்டன்)

குடியேற்றத்திற்காக விண்ணப்பிக்க 19 நாடுகளுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதை தொடர்ந்து சட்ட விரோதமாக குடியேறுபவர்கள் மீது ட்ரம்ப் நிர்வாகம் கடுமையாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் அவர்கள் கைது செய்து நாடு கடத்தப்படுகிறார்கள்.

இந்த நிலையில் அமெரிக்காவில் குடியுரிமை பெறுவதற்காக விண்ணப்பிக்க 19 நாடுகளுக்கு தடை விதித்து ட்ரம்ப் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான், மியன்மார், சாட், காங்கோ குடியரசு, ஈகுவடாரில் கினி, எரித்ரியா, ஹைதி, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், ஏமன், புரூண்டி, கியூபா, லாவோஸ், சியாரா லியோன், டோகா, துர்க்மெனிஸ்தான் மற்றும் வெனிசுலா உள்ளிட்ட 19 நாடுகளை சேர்ந்த குடிமக்கள் அமெரிக்கா குடியுரிமை பெற விண்ணப்பிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. (நி)



## ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு பகவத் கீதையை பரிசளித்தார் மோடி



(டில்லி)

ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு பகவத்கீதையை இந்தியப் பிரதமர் மோடி பரிசளித்துள்ளார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்தியா சென்றுள்ளார்.


தனி விமானம் மூலம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு டில்லி வந்த புடினை விமான நிலையத்திற்கே நேரில் சென்று இந்திய பிரதமர் மோடி வரவேற்றார்.

பின்னர் இருவரும் ஒரே காரில் பயணித்தனர். இந்தியப் பிரதமர் இல்லத்தில் புடினுக்கு இந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் கிழக்குப் பகுதியை விரைவில் கைப்பற்றுவோம்!

## புடின் மீண்டும் எச்சரிக்கை



**(மொஸ்கோ)**

**உக்ரைனின் கிழக்கு டான்பாஸ் பகுதியில் இருந்து உக்ரைன் படையினர் வெளியேற வேண்டும், இல்லையெனில் மொஸ்கோ குறித்த பகுதியை கைப்பற்றும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மீண்டும் எச்சரித்துள்ளார்.**

அதேநேரம், உக்ரைனில் போரை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவது என்பது குறித்த சமரசத்தையும் அவர் நிராகரித்தார்.

டான்பாஸின் 85% பகுதியை மொஸ்கோ கட்டுப்பாட்டில் கொண்டுள்ளது.

அதேநேரம், உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, டான்பாஸ் பகுதியை விட்டுக் கொடுக்கும் திட்டத்தை நிராகரித்துள்ளார்.

அமெரிக்க அமைதித் திட்டம் குறித்து விவாதிக்கும் தனது பேச்சுவார்த்தையாளர்கள், கடந்த செவ்வாய்க்கிழமை மொஸ்கோவில் நடந்த பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் ரஷ்யாவின் தலைவர் "போரை முடிவுக்குக் கொண்டுவர விரும்புவார்" என்று நம்புவதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியதை அடுத்து புடினின் இந்தக் கருத்துக்கள் வந்துள்ளன.

ரஷ்யா 2022 பெப்ரவரியில் உக்ரைன் மீது முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கியது.

மேலும் தற்போது மொஸ்கோ உக்ரைன் பிரதேசத்தில் சுமார் 20% கட்டுப்பாட்டினை கொண்டுள்ளது.

மோதல்களினால் கடுமையான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ள போதிலும், அண்மைய வாரங்களில், தென்கிழக்கு உக்ரைனில் ரஷ்ய படையினர் மெதுவாக முன்னேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)


---

பிரதமர் மோடி தனிப்பட்ட இரவு விருந்து அளித்தார்.

இரவு விருந்துக்குப் பின் புடினுக்கு பகவத்கீதையை மோடி பரிசளித்தார்.

இதுதொடர்பாக இந்தியப் பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், பகவத் கீதையை ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு பரிசளித்துள்ளேன்.

கீதையின் போதனைகள் உலகெங்கிலும் உள்ள கோடிக் கணக்கான மக்களுக்கு உத்வேகத்தை அளிக்கின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



---

## கொங்கோ - ருவாண்டா இடையே அமைதி ஒப்பந்தம் கைச்சாத்து

(கின்சாசா)

ஆபிரிக்க நாடுகளான கொங்கோ, ருவாண்டா இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வந்தது.

இதற்கிடையே இந்த இரு நாடுகளின் மோதலை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மத்தியஸ்தம் செய்தார்.

இதில் கொங்கோ, ருவாண்டா இடையே உடன்பாடு ஏற்பட்டது. இரு நாடுகளும் மோதலை கைவிட்டு அமைதிக்கு திரும்ப ஒப்புக்கொண்டன.

இதையடுத்து வெள்ளை மாளிகையில் ட்ரம்ப் முன்னிலையில் கொங்கோ, ருவாண்டா இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதில் கொங்கோ ஜனாதிபதி பெலிக்ஸ் ஷிசெ கெடி, ருவாண்டா ஜனாதிபதி பால் ககாமே ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்த அமைதி ஒப்பந்தத்தை தொடர்ந்து கொங்கோவில் உள்ள கனிமவளங்களை அமெரிக்க நிறுவனங்கள் வெட்டி எடுக்க ஒப்பந்தமும் கையெழுத்தானது.

இது ஆபிரிக்காவிற்கு ஒரு சிறந்த நாள், உலகிற்கு ஒரு சிறந்த நாள். பலர் தோல்வியடைந்த இடத்தில் நாம் வெற்றி பெற்று இருக்கிறோம்.


உலகம் முழுவதும் நாங்கள் அமைதியை நிலை நாட்டுகிறோம்.

இதுவரை யாரும் கண்டிராத அளவில் போர்களை நாங்கள் தீர்த்து வருகிறோம். இதுவரை 8 போர்களை தீர்த்துவிட்டேன்.

மேலும் இன்னொரு போரை தீர்க்க முயற்சி நடக்கிறது. அது ரஷ்யா - உக்ரைன் போர். அதனை நிறுத்த நாங்கள் மிகவும் கடினமாக உழைத்து வருகிறோம்.

கனிமங்களை வெட்டி எடுக்க மிகப்பெரிய அமெரிக்க நிறுவனங்களில் சிலவற்றை இருநாடுகளுக்கும் அனுப்புவதில் நாங்கள் ஈடுபடுவோம்.

அனைவரும் நிறைய பணம் சம்பாதிக்கப் போகிறார்கள் என ட்ரம்ப் தெரிவித்தார். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணல் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மணல்களானது எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதி மன்ற வளாகத்தில் வைத்து பிராந்திய ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவ் ஏலத்திற்கான நடை முறைகளை நீதிமன்றில் பதி வாளர் வெளியிட்டுள்ளார்.

அதன் பிரகாரம் குறிப்பிட்ட பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப் பின் ஏல விற்பனை ஆரம்பிப் பதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

குறித்த ஏல விற்பனையில் பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமூக மளித்தல் வேண்டும்.

ஏல விற்பனையின்போது மதிப்பிடப்பட்ட விலை கிடைக் காவிடத்து அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்ன கத்தே வைத்திருக்கும்.


ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உட னடியாக பணத்தினைச் செலுத்தி ஏலப்பொருளினை அப்புறப்படுத்த வேண்டும்.

கொடுப்பனவுகள் பணமாக மட்டும் செலுத்துதல் வேண் டும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## நெடுந்தீவு கடற்பரப்பில் கைப்பற்றப்பட்ட பெருமளவு வெளிநாட்டு சிகரெட்டுகள்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு தெற்கு கடற்பகு தியில் இருந்து பெருந் தொகை யான வெளிநாட்டு சிகரெட்டுகள், அழகுசாதனப் பொருட்கள் மற் றும் கைக்கடிகாரங்கள் ஆகிய வற்றை கடற்படையினர் கைப் பற்றியுள்ளனர்.



கடந்த 3ஆம் திகதி, நெடுந் தீவுக்கு தெற்கு கடற்பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் கடலில் மிதந்து வந்த 9 பொதிகளை கடற்படை யினர் மீட்டு, அவற்றை சோத னையிட்டனர்.

அதில் சுமார் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள், 150 அழகுசாதன கிறீம்கள், லோஷன்கள் மற்றும் 10 கைக்கடிகாரங்கள் என்பன காணப்பட்டுள்ளன.

கடத்தல்காரர்கள், கடற் படையினரின் சுற்றுக்காவல் நடவடிக்கையின்போது, கடற் படை படகினை கண்ணுற்று, பொதிகளை கடலுக்குள் வீசி விட்டு தப்பிச் சென்று இருக்க லாம் என கடற்படையி னர் சந்தேகம் தெரிவித்துள்ள னர்.

அதேவேளை, மீட்கப்பட்ட பொருட்களை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக, நெடுந்தீவு பொலிஸாரிடம் ஒப்படைத்துள் ளனர். (3-33)

## புயலுக்குப் பின்னரான துப்பரவு பணிகள் வவுனியாவில் முன்னெடுப்பு!



(வவுனியா)

வெள்ளப் பேரிடரின் பின் னர் வவுனியாவில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத் தின் கீழ் வவுனியாவில் விசேட வேலைத்திட்டம் ஒன்று நேற்று முன்தினம் முன்னெ டுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட அர சாங்க அதிபர் பீ.ஏ.சரத் சந்திர தலைமையில் இவ்வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.


வெள்ளப் பேரிடரின் கார ணமாக வவுனியாவின் பல்வேறு வீதிகள், வடிகால் களில் குப்பைகள், போத்தல் கள், பொலித்தீன்கள், பிளாஸ் ரிக் பொருட்கள், ரயர்கள், உள் ளிட்டவை தேங்கியும் பழந்தும் காணப்படுகின்றன.

இதன் காரணமாக வெள் ளநீர் தேங்கி நின்று டெங்கு, மலேரியா நுளம்பு பெருகுகின்ற அபாய நிலை ஏற்பட்டுள்ளது டன் வீதிகளும் சுத்தமற்றதாக வும் காணப்படுகின்றது.

குறித்த விசேட வேலைத் திட்டத்தின் கீழ் வீதிகளையும் வடிகால்களையும் துப்புரவு செய்கின்ற பணி வவுனியா நகரம் மற்றும் செட்டிகுளம் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப் பட்டது.

இதில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தலை மையில் வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், வவுனியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதார பிரிவினர், சுகாதார பரிசோதகர் கள், வவுனியா வைத்திய சாலை உத்தியோகத்தர்கள், பொலிஸார், சமுதாய பொலிஸ் குழுவினர், வவுனியா பல்க லைக்கழகத்தினர், மலேரியா தடை இயக்கத்தினர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர் உள் ளிட்ட பலர் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெ டுத்துள்ளனர். (3-250)

## முருங்கன் ஆதார வைத்தியசாலையின் ஏற்பாட்டில் நடமாடும் மருத்துவ முகாம்



(மன்னார்)

நாட்டில் ஏற்பட்டுள்ள புயல், அதனைத் தொடர்ந்து பெய்த கடும்மழை மற்றும் வெள் ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்டு நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு முருங்கன் ஆதார வைத்தியசாலையின் ஏற் பாட்டில் நடமாடும் வைத்திய சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முருங்கன் ஆதார வைத் தியசாலையின் வைத்திய அத் தியட்சகர் வைத்தியர் எம்.ஒஸ்மன் சாள்ஸ் தலை மையிலான குழுவினர் தொடர்ச்சியாக வைத்திய பரி சோதனைகள் முன்னெடுத்து வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மன்னார் மாவட் டத்தில் மன்னார், மாந்தை மேற்கு, மடு, நானாட்டான் மற்றும் முசலி ஆகிய ஐந்து பிரதேசச் செயலாளர் பிரிவு களிலும் மக்கள் பாதிக்கப்பட்ட னர்.

பாதிக்கப்பட்ட மக்கள், பாட சாலைகள் மற்றும் பொது மண்டபங்களில் தங்க வைக் கப்பட்ட நிலையில் குறித்த நலன்புரி நிலையங்களில் தங் கியுள்ள குழந்தைகள், சிறுவர் கள், பெண்கள், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் வயோதி பர்கள் ஆகியோரின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக் கான மருத்துவச் சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (3-285)

## கலைஞனின் குரல்
### மாதாந்த பத்திரிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் கலைஞர் மேம் பாட்டு மன்றம் நடத்தும் "கலைஞனின் குரல்" இதழ் - 5 மாதாந்த பத்திரிகை வெளி யீட்டு நிகழ்வானது இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம், பாஷையூர், 2ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள முத்த மிழ் கலைஞர் மேம்பாட்டு மன்ற பிராந்திய செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

கலைஞனின் குரல் மன்ற ஆசிரியர் இரா.மதிகரன் தலை மையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வரவேற்புரையினை நூலகர் செல்வி. சத்தியசீலன் பாலஜெகனி, சிறப்புரையினை செல்வி. சிவனேசராசா கபி ஷனா, வெளியீட்டுரையினை தென்மராட்சி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் யூட் அல்போன்சன் மேவிஸ் நீன்சியா ஆகியோரும் நிகழ்த் தவுள்ளனர்.

அத்துடன் சக்தி கலாசார மேம்பாட்டு மன்ற தலைவர் திருமதி அருண்ராஜ் சனுஜா முதல் பிரதியைப் பெற்றுக் கொள்ளவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (3)

## "மேகே தாக தாரா" திரைப்படக் காட்சி

வங்காளத் திரைப்பட மேதை றித்விக் கடக் நூற் றாண்டு நினைவாக யாழ்ப் பாணத் திரைப்படக் கழ கத்தின் **"மேகே தாக தாரா"** எனும் 19ஆவது திரைப்படக் காட்சி இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்ப் பாணத்திலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது. (3)

## அறிவுத்திருக்கோவில்
### யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக் கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோவிலில் இந்த வாரத் திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப் பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாக வுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளித்தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர எளியமுறை உடற்பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள், காயகல்ப பயிற்சி மற்றும் சூரிய நமஸ்காரம் என் பன வழங்கப்படும்.

பயிற்சிகளை 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலரும் பங்குபெற லாம்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரி யர் ரி.காஞ்சிநாதன் வழங்கு வார்.

மேலதிக தகவல்களுக்கு 0212222772 எனும் இலக் கத்துடன் தொடர்புகொள்ள முடியும். (3)

## நூல் அறிமுக நிகழ்வு

சாந்தினி வரதராஜன் எழுதிய **"எல்லாம் இழந்த பின்னும்"** எனும் நூல் அறிமுக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணத் திலுள்ள எங்கட புத்தக இல் லத்தில் அ.யேசுராசா தலை மையில் நடைபெறவுள் ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தங்களினால் 1,160 சிறுகுளங்கள் சேதம்

# விவசாய அபிவிருத்தி திணைக்களம் தகவல்

(கொழும்பு)

**அனர்த்தங்களினால், விவசாய அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமான 1,160 சிறுகுளங்கள் சேதமடைந்துள்ளதாக அந்த திணைக்களத்தின் பணிப்பாளர் தம்மிக்க ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

அத்துடன், 747 சிறு குளங்கள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரம், வவுனியா மற்றும் குருநாகல் மாவட்டங்களிலுள்ள சிறு குளங்கள் அதிகளவில் சேதமடைந்துள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த குளங்களுக்கு முன்னுரிமை வழங்கி அவற்றை புனர்நிர்மாணம் செய்வதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக பணிப்பாளர் தம்மிக்க ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதி ஒதுக்கீடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.


இதேவேளை விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் 15,958 குளங்கள் தற்போது பராமரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 1200 | 1000 | 700 | 800 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 180 | 250 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 250 | 300-500 |
| தக்காளி | 400 | 650 | 700 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 160 | 200 | 150 |
| கோவா | 350 | 150 | 200 | 400 |
| கரட் | 400 | 500-700 | 300 | 600 |
| பூசணி | 120 | 140 | 50 | 150 |
| புடோல் | 300 | 400 | 120 | 300 |
| வாழைக்காய் | 60 | 70 | 50 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300-350 | 200 | 200-400 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 150 | 250 |
| பாகற்காய் | 800 | 1600 | 850 | 1500 |
| வெண்டக்காய் | 350 | 400 | 120 | 400 |
| கருணைக்கிழங்கு | 300 | 280 | 200 | 300 |
| பயற்றங்காய் | 1200 | 1000 | 1400 | 800 |
| லீக்ஸ் | 600 | 600 | 250 | 600 |
| பீற்றூட் | 250 | 300 | 120 | 500 |
| கறிமிளகாய் | 1200 | 900 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 1500 | -- | 400 | -- |
| போஞ்சி | 800 | 900 | 400 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 1000 | 800 | -- | 600 |
| கீரை - 1 பிடி | 140 | 140-200 | 250 | 200 |
| தேசிக்காய் | 1200 | 800 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 160 | 150-200 |
| இராசவள்ளி | 450 | 800 | 500 | 800 |
| வெங்காயப்பூ | -- | 1000 | -- | 800 |
| முள்ளங்கி | 200 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 50 | 100 |
| ஈரப்பலா | 250 | 100-150 | 120 | 200 |

# பேரிடரால் மூடப்பட்டிருந்த

## மிருகக்காட்சிச்சாலைகள் மீள திறப்பு



(கொழும்பு)

அனர்த்த நிலைமையால் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த தெஹிவளை மற்றும் பின்னவல மிருகக்காட்சிச்சாலைகள் மீள திறக்கப்பட்டுள்ளன.

மரங்கள் முறிந்து வீழ்ந்தமையால் மிருகக்காட்சிச்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டதாக தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களம் தெரிவித்தது.

இந்நிலையில் சீரமைப்பு பணிகள் நிறைவடைந்த நிலையில் மிருகக்காட்சிச்சாலைகளை மீள திறக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் கூறியுள்ளது. (நி)

# இராசிபலன்

06.12.2025
கார்த்திகை 20, சனிக்கிழமை
துதியை பின்னிரவு 1.25 மணிவரை

மிருகசீரிடம் பிற்பகல் 12.10 மணிவரை
சுப நேரம் 3.17-4.47 மணிவரை
இராகுகாலம் 9.17-10.47 மணிவரை

சந்திராஷ்டமம்: விசாகம், அனுசம்

**வளவன்**

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், தேவையற்ற குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்** உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், சுறுசுறுப்பான நாள், வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**விருச்சிகம்** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**கும்பம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.

**கன்னி** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி தொழில் ஆதாயம் காண முற்படுவீர்கள்.

**தனுசு** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

**வாழ்க்கை எனக்கொரு புதிர் ஆனால் நானும் வாழ்க்கைக்கு ஒரு புதிர் தான்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 927



முதன்மந்திரியின் இந்தச் சாமர்த்தியமான வார்த்தைகளைக் கேட்டுச் சக்கரவர்த்தி புன்னகை புரிந்தார். “என் வார்த்தையைக் கொண்டே என்னை மடக்குகிறீர்கள். அது என் சொந்தக்காரியம். அதற்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஆயினும் சொல்லுங்கள், கேட்கிறேன்” என்றார்.

“பழுவூர் பெரிய அரண்மனைக்கு மூன்று வருஷங்களுக்கு முன்னால் இளைய ராணி நந்தினி தேவி வந்து சேர்ந்தாள். அது முதல் பழுவூர் அரண்மனைக்குச் சில மந்திரவாதிகள் அடிக்கடி வந்து போகிறார்கள். இது சின்னப் பழுவேட்டரையருக்கும் தெரியும். அவருக்கும் மந்திரவாதிகள் வருவது பிடிக்கவில்லை. ஆனாலும் தமையனாரை எதிர்த்துப் பேசத் தைரியமில்லாமல் சும்மா இருந்து வருகிறார்.”

“சகோதரர்கள் என்றால், இப்படியல்லவா இருக்க வேண்டும்!”

“சகோதர விசுவாசத்தினால் இராஜ்யத்துக்குக் கேடு வரக்கூடாதல்லவா?”

“இப்போது இராஜ்யத்துக்கு என்ன கேடு வந்து விட்டது? ஒரு பேதைப் பெண் யாரோ மந்திரவாதிகளைக் கூப்பிட்டு மந்திரம் போடச் சொல்வதினால் இராஜ்யம் கெட்டுப் போய் விடுமா? பழுவூர் இளையராணி மந்திரம் போட்டுத்தான் எனக்கு நோய் வந்துவிட்டதென்று சொல்லுகிறீர்களா?”

“சக்கரவர்த்தி! பழுவூர் இளைய ராணியைப் பார்க்க வருகிறவர்கள் உண்மையில் மந்திரவாதிகள் அல்ல. மந்திரவாதிகள் என்று சொல்லிக் கொண்டு வரும் சதிகாரர்கள் என்று சந்தேகிக்கிறேன். அவர்கள் மூலமாக நம் பொக்கிஷத்திலிருந்து பொருள் போய்க் கொண்டிருக்கிறதென்றும் சந்தேகிக்கிறேன்.”

“எதைப் பற்றி வேணுமானாலும் யாரைப் பற்றி வேணுமானாலும் சந்தேகிக்கலாம் ஆதாரம் ஏதேனும் உண்டா?”

“மன்னர் மன்னா! இன்றைய தினம் பெரிய பழுவேட்டரையரின் அரண்மனையையும், பொக்கிஷ நில வறையையும் சோதனை போட்டால் ஒரு வேளை ஆதாரம் கிடைக்க லாம்.”

“இதைக் காட்டிலும் எனக்குப் பிரியமில்லாத காரியத்தை இதுவரை யாரும் சொன்னது கிடையாது. அநிருத்தரே! நீர் எனக்கு மட்டும் நண்பர். பழுவேட்டரையர் எனக்கு முன் மூன்று தலைமுறையைச் சேர்ந்த சோழ சக்கரவர்த்திகளுக்கு உயிருக்குயிரான நண்பர். சோழ குலத்துக்கு இரும்புக் கவசம் போன்றவர். சோழர்களின் பகைவர்களுக்கு இந்திரனுடைய வஜ்ராயுதம் போன்றவர். அப்படிப்பட்டவருடைய மாளிகையை அவர் இல்லாதபோது சோதனை போடுவதா? பழுவேட்டரையர் தம் அரண்மனையில் சதிகாரர்களுக்கு இடம் கொடுக்கிறார் என்று நம்புவதைக் காட்டிலும், மலையமான் மகள் மருந்து என்று சொல்லி எனக்கு நஞ்சைக் கொடுக்கிறாள் என்று நம்புவேன்.”


“சக்கரவர்த்தி! பழுவேட்டரையருக்குத் தெரிந்து இது நடைபெறவில்லை. மோகத்தினால் கண்ணிழந்திருக்கும் பழுவேட்டரையருக்குத் தம் எதிரில் நடப்பது தெரியவில்லை. அவர் அறியாமலே அவருடைய மாளிகை சதிகாரர்களின் தலைமை ஸ்தலமாக இருந்து வருகிறது.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## பிறவிப் பகை நட்பாக முடியாது



(நேற்றைய தொடர்ச்சி)

பூனையின் அருகில் சென்று, “நீ என் எதிரியாக இருந்தாலும்கூட, இப்போது நீ சிக்கிப் பரிதவிப்பதைக் காணும் போது, எனக்கு இரக்கமேலிடுகிறது. என் பற்களால் இந்தக் கண்ணியை கடித்து உன்னை விடுவித்து விடுகிறேன். ஆனால், நீ விடுபட்டதும், உன்னால் எனக்கு ஆபத்து நேரிடுமோ என்று தான் பயமாக இருக்கிறது” என்றது எலி,

“எலியே! நாம் எதிரிகளான போதிலும், இப்பொழுது என்னை நீ விடுவித்து விட்டால், உனக்கு நண்பனாக இருப்பேன். ஆபத்தான வேளையில் என் உயிரைக் காப்பாற்றிய உன்னை ஒருபோதும் ஒன்றும் செய்ய மாட்டேன் என்று உறுதி அளிக்கின்றேன்” என்று கெஞ்சியது பூனை.

உடனே எலி பூனையை நெருங்கியது. அதைக் கண்ட கீரியும், ஆந்தையும் எலியைப் பிடிக்க வழியில்லாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்று விட்டன.

எலியிடம், “சீக்கிரம் பற்களால் கண்ணியை அறுத்து விடு, விடியப் போகிறது, வேடன் வந்து விடுவானே என்று அவசரப்படுத்தியது பூனை. கண்ணிகளை கத்தரிப்பது போல், பற்களை வைத்து பாசாங்கு செய்து, வேடனின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தது எலி.

கண்ணியிலிருந்து சீக்கிரமே விடுபட்டு விடுவோம் என்ற நம்பிக்கையோடு இருந்தது பூனை.

பொழுது விடிந்தது, வேடனும் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்ட எலி, கண்ணியின் சுருக்கை இறுகச் செய்துவிட்டு, வேடனுக்கு அஞ்சி ஓடத் தொடங்கியது.

எலியிடம் இது நியாயமா? உதவிபுரிவதாகக் கூறி, நம்பிக்கை மோசம் செய்து விட்டாயே? என்று பரிதாபமாகக் கேட்டது பூனை.

“விரோதிகள்கூட சந்தர்ப்பம் காரணமாக, நண்பர்களாக ஆவார்கள். ஆனால், அத்தகைய நட்பானது உண்மையான நட்பாகவும், வெகு காலத்துக்கு நீடிக்கக் கூடியதாகவும் இருக்காது” என்று கூறி, ஒரே ஓட்டமாக ஓடியது எலி. பிறவியிலேயே பகைவர்களாக இருப்பவர்கள் நட்புக் கொள்ள முடியாது. (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான எண்ணங்களால் மனம் நிறைந்திருந்தால், நான் செய்யும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சி தரும். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குற்றச்சாட்டுக்கள் மட்டுமே எம் விமர்சனமாகி விட்டதா?

இயற்கை அனர்த்தத்தின் காரணமாக ஏற்பட்ட இழப்புகளுக்கு நிவாரணம் வழங்குகின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அத்தனை பேருக்கும் நிவாரணம் கிடைக்க வேண்டுமென்பதில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் அதி கருசனை கொண்டுள்ளது.

அதேநேரம் வெள்ள அனர்த்தத்தால் ஏற்பட் இழப்புகள் அவற்றின் தன்மைக்கேற்ப வேறுபடும்.

அதாவது உயிரிழப்புகள் மற்றும் முழுமையான சொத்தழிவுகள் இழப்பின் உச்சமாகும்.

தவிர, தாழ்வான பகுதிகளில் இருக்கக்கூடிய மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து வீட்டில் இருக்கக்கூடிய மின்உபகரணங்கள் மற்றும் உடைமைகள் சேதமடையக்கூடிய வாய்ப்புகளும் இருந்தன.

எனவே வீட்டுக்குள் வெள்ளம் புகுந்திருந்தால், வீடுகளைச் சுத்தம் செய்வது – ஏற்பட்ட பாதிப்புகளை நிவர்த்திப்பது என்ற வகையிலும் அரசாங்கம் நிவாரணக் கொடுப்பனவாக இருபத்தையாயிரம் ரூபாவை வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

இத்தகைய அறிவிப்புகளுக்கு அமைய பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்களை கிராம உத்தியோகத்தர்கள் மூலமாகத் திரட்டி ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் தத்தம் மாவட்ட செயலகங்களுக்கு வழங்குவதனூடு, ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பு தரவிடப்படுகிறது.

அந்தவகையில் யாழ்.மாவட்டத்தின் தரவுகள் உரிய இடங்களுக்கு அனுப்பப்பட்டு அதற்கான நிவாரணத் தொகை மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

பொதுவில் கடந்த கால ஆட்சியாளர்கள் நாம் கேட்கின்ற நிவாரணத் தொகையை ஒரு போதும் வழங்கவில்லை.

இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்காமல் போவதுடன் பொதுமக்கள், கிராம உத்தியோகத்தர்கள் மீதும் பிரதேச செயலகங்கள் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது வழக்கம்.

ஆனால், அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களின் தரவுகளுக்கு ஏற்ப நிவாரணத் தொகையை வழங்கியுள்ளது.

இந்நிலையில் யாழ்.மாவட்டம் அதிக இழப்பீட்டுத் தொகைக்கு விண்ணப்பித்துக் கூடிய நிவாரணத் தொகையை பெற்றுவிட்டதாக கருத்துரைப்பது எந்தளவு தூரம் ஆரோக்கியமானதென்பது பற்றி ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

ஏனெனில், யாழ்.மாவட்டத்திலும் பலர் வெள்ளப்பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். அவர்களுக்கும் சிறிய நிவாரணம் கிடைக்க வேண்டும்.

அதேநேரம் வழங்கப்படுகின்ற நிவாரணம் உரியவர்களுக்குச் சென்றடைவதை வெளிப்படையாக கிராம உத்தியோகத்தர்களும் உரிய பிரதேச செயலகங்களும் தத்தம் அலுவலகங்களில் காட்சிப்படுத்துவதன் மூலம் நிவாரணக் கொடுப்பனவுகள் நியாயபூர்வமாக நடந்துள்ளதென்பதை உறுதி செய்யலாம்.

ஆக, எடுத்த எடுப்பில் – எழுந்தமானமாக – ஒரு சிலரை இலக்கு வைத்து தாக்க வேண்டுமென்பதற்காக பாதிப்புக்குள்ளானவர்களுக்கு கிடைக்க வேண்டிய நிவாரணத்தை தடுப்பது நீதியும் தர்மமும் ஆகாது.

# பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க ரூ.10 பில்லியன் ஒதுக்கீடு

## சபையில் அமைச்சர் ஆனந்த விஜேபால

பேரிடர்களால் பாதிக்கப்பட்ட அனைத்து நபர்களுக்கும் இழப்பீடு வழங்க 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்றுப் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பலர் வங்கிப் புத்தகங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் போன்ற ஆவணங்களை இழந்து விட்டதால் இழப்பீட்டைப் பணமாக வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் டித்வா புயல் மிளகாய், மக்காச்சோளம் போன்ற பயிர்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வதாகப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முழு நாட்டுக்கும் சுமார் 10 ஆயிரத்து 290 மில்லியன் ரூபாவை முதற்கட்டமாக ஒதுக்கியுள்ள நிலையில் பாதிப்பு குறித்த தரவுகளின் அடிப்படையில் மாவட்ட செயலாளர்களின் கண்காணிப்பில் பிரதேச செயலகங்கள் ரீதியாக இந்த நிதி பங்கீடு செய்யப்படவுள்ளது.

இதில் வடக்கு மாகாணத்தில் அதிக பாதிப்புக்குள்ளான மன்னார் மாவட்டத்திற்கு விசேடமாக 954 மில்லியன் ரூபாவும் யாழ்ப்பாணத்துக்கு 365 மில்லியன் ரூபாவும் கிளிநொச்சிக்கு 206 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவுக்கு 189 மில்லியன் ரூபாவும் வவுனியாவுக்கு 158 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## Rebuilding Srilanka நிதியத்திற்கு ரூ.697 மில்லியன் நன்கொடை

Rebuilding SriLanka நிதியத்திற்கு இதுவரை 697 மில்லியன் ரூபாய்க்கும் அதிக நன்கொடை கிடைத்துள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

பேரிடர் காலத்திற்குப் பின்னரான நடவடிக்கைகள் தொடர்பான பிந்திய தகவல்களை அறிவிக்கும் வகையில் வெளியிடப்பட்ட காணொளியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி Rebuilding SriLanka நிதியத்தின் இலங்கை வங்கிக் கணக்கிற்கு 635 மில்லியன் ரூபாய் நிதியும் இலங்கை மத்திய வங்கியின் கணக்கிற்கு 61 மில்லியனுக்கும் அதிக நிதியும் கிடைத்துள்ளதாக அவர் கூறியுள்ளார். 33 நாடுகளிலிருந்து இந்த நிதியுதவி கிடைத்துள்ளதாகவும் நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படி 30 ஆயிரத்து 470 பங்களிப்புகளின் ஊடாக இந்த நிதியுதவி கிடைத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வங்கிக் கணக்குகளுக்கு மாத்திரம் நிதி உதவி

(கொழும்பு)

அதிதீவிர வானிலையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவுவதற்காகப் பல நன்கொடையாளர்கள் முன்வந்துள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களால் வழங்கப்படும் நிதியை உரியவாறு வெளிப்படைத் தன்மையுடன் முகாமைத்துவம் செய்வதற்காகவே வங்கிக் கணக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதி தீவிர வானிலையால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வங்கிக் கணக்குகளுக்கு மாத்திரம்நிதி உதவிகளை வைப்பிலிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடப்படும் நிதிக்கு மாத்திரமே அரசாங்கம் நேரடியாகப் பொறுப்புக் கூறும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதனைத் தவிர்த்து அமைப்புகள் அல்லது தனிநபர் வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடப்படும் நிதிக்கான அனுமதியோ அல்லது அங்கீகாரமோ வழங்கப்படாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான நிதிப் பங்களிப்புகளைப் பெற்றுக் கொடுக்கும் போது அதன் நம்பகத்தன்மை குறித்து மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்தின் வங்கிக் கணக்கு பற்றிய தகவல்களுக்கு www.donate.gov.lk என்ற இணையத் தளத்திற்குள் பிரவேசித்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (நி)

## உதவிக்கரம் நீட்டிய கனடா

இலங்கையில் ஏற்பட்ட பேரிடர் வெள்ளப் பெருக்கிற்கு உதவிக்கரம் நீட்டும் வகையில், கனடா அரசு ஆரம்பகட்டமாக ஒரு மில்லியன் கனேடிய டொலர் அவசர மனிதாபிமான உதவியை அறிவித்துள்ளது.

இந்த உதவி பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு தற்காலிக தங்குமிடம், குடிநீர், சுகாதார சேவைகள் மற்றும் அத்தியாவசிய நிவாரணப் பொருட்களை வழங்குவதற்காக நம்பகமான சர்வதேச அமைப்புகள் மூலம் வழங்கப்படும். மேலும், இது உலக உணவுத் திட்டம் மூலமாக முன்பே வழங்கப்பட்ட உதவியின் தொடர்ச்சியாகும்.

இந்த அறிவிப்பை கனேடிய தமிழர் பேரவை வரவேற்று கனடா அரசுக்கு தனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளது. (நி)

## யாழ்ப்பாண நீதிமன்றில் பகிரங்க ஏலவிற்பனை


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றினால் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் இன்று காலை 10.00 மணியளவில் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

அதன்பிரகாரம் வழக்குகளில் பதிவு செய்யப்பட்ட துவிச்சக்கர வண்டிகள், டிப்பர், கார் உள்ளிட்ட மோட்டார் வாகனங்கள் உழவு இயந்திரப் பெட்டிகள் உள்ளிட்ட பொருட்கள் ஏலமிடப்படவுள்ளதாகவும் குறித்த பொருட்களை காலை 9.00 மணிக்கு முன்னர் பார்வையிட முடியும் எனவும் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் கைலாசபதி நினைவுகள்



பேராசிரியர் கைலாசபதி காலமாகி 40 ஆண்டுகள் ஆகிவிட்டன. 1933ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி கோலாலம்பூரில் பிறந்த கைலாசபதி 1982 ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் திகதி தனது நாற்பத்தொன்பதாவது வயதிலே, கொழும்பில் காலமானார். தமிழ்மொழிக்கு அழியாத வாழ்வும் வளமும் கொடுத்த மகாகவி பாரதி, புதுமைப்பித்தன் முதலானோர் பயணித்த பாதையிலேயே கைலாசபதியின் காலமும் பயணித்தது. கைலாசபதியின் வாழ்வுக் குறிப்புக்கள் சிலவற்றை முன்னீடாக ஓடவிட்டுப் பின் என் நினைவுத் திரையிலே காட்சியையும் கருத்தையும் காட்டலாம் என்று எண்ணுகிறேன்.

கனகசபாபதி கைலாசபதி ஆரம்பக் கல்வியைக் கோலாலம்பூரிலே பெற்றார். பின்னர் தாயகம் வந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே இடைநிலைக் கல்வியைப் பெற்றார். கார்த்திகேசன் முதலான ஆசிரியர்களும் முருகையன் முதலான நண்பர்களும் இந்துக் கல்லூரியிலே இவருக்கு வாய்த்தனர். பின்னர் கொழும்பு றோயல் கல்லூரியிலே கற்று 1953ஆம் ஆண்டு பல்கலைக் கழகம் சென்றார். பல்கலைக்கழகத்திலே தமிழைச் சிறப்புப் பட்டமாகப் பயின்று 1957ஆம் ஆண்டு முதற்தரத்தில் (1st class) சித்தியெய்தினார். 1961ஆம் ஆண்டில் பல்கலைக்கழக விரிவுரையாளராக இணையும்வரை தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய காலப்பகுதி தினகரன் பத்திரிகையின் பொற்காலம் என்று சொல்லுவார்கள். இயல்பாகவே திறமைசாலிகளை இனங்கண்டு தூக்கிவிடும் ஆற்றல் கைவரப் பெற்ற கைலாசபதி ஈழத்தின் சிறந்த எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தினகரனிலே களம் அமைத்துக் கொடுத்தார். அவரது ஆற்றலும் ஆளுமையும் தினகரனை வளர்க்க உதவியன.

1963ஆம் ஆண்டில் பாமிங்காம் பல்கலைக்கழகம் சென்று தமிழ் வீரயுகக் கவிதைகள் பற்றி ஆய்வு செய்து கலாநிதிப் பட்டம் பெற்றுத் திரும்பினார். இவரின் தமிழ் வீரயுகக் கவிதைகள் என்னும் ஆய்வேடு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தினால் நூலாக வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர் பேராதனைப் பல்கலைக் கழகம், கொழும்புப் பல்கலைக் கழகம், வித்தியாலங்காரப் பல்கலைக்கழகம் என்பவற்றிலே பணியாற்றி 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாண வளாகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

குறைந்த வளங்களுடன் தொடங்கிய பல்கலைக்கழக வளாகத்தைக் கட்டியெழுப்புவதில் இரவு, பகல் பாராது அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். தலைவர் என்ற வகையிலே ஆக்கபூர்வமான பல பணிகளை இவர் முன்னெடுத்தார். உயர்ந்த நிலையிலே ஆய்வுகளை முன்னெடுத்தல், சிறந்த முறையிலே விரிவுரைகளை நிகழ்த்துவித்தல், பௌதிக வளங்களை அதிகரித்தல் முதலான பலவற்றிலே இவர் அதிக கவனம் செலுத்தினார். "மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற குறள்வழி நின்று பல்கலைக்கழக வளாகத்தை வளர்க்க வேண்டுமென்ற கருத்து நிலை இவரிடம் நிரம்ப இருந்தது. தமிழ் ஆய்வைத் தமிழியல் ஆய்வாக வளர்த்து நிலைபெறச் செய்த முன்னோடிகளுள் ஒருவராகக் கைலாசபதி திகழ்ந்தார். தான் வரித்துக் கொண்ட மாக்சியச் சிந்தனைப் பின்புலத்தில் தமிழியல் ஆய்விலே தடம்பதித்தார்.

ஒப்பியல் இலக்கிய ஆய்வு, திறனாய்வு, நவீன தமிழ் இலக்கிய ஆய்வு, பழந்தமிழ் இலக்கிய ஆய்வு, ஈழத்து இலக்கிய ஆய்வு முதலான பல துறைகளிலே பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி உலக அரங்கில் நின்று நிலைக்கும் தமிழியல் ஆய்வாளராகத் திகழ்ந்தார். ஈழத்து இலக்கிய வரலாறு பற்றிச் செம்மையான நூலொன்றை எழுத வேண்டும் என்ற எண்ணம் இவரிடம் இருந்ததை நான் நன்கு அறிவேன். கைலாசபதி மறைந்த பின் அவரைப் பற்றிப்பல நூல்கள், ஆய்வுகள், மலர்கள், ஆய்வேடுகள் ஆகியன வெளிவந்துள்ளன. அவை அவரின் பல்பரிமாணத்தைக் காட்டுவன. இந்தளவிலே கைலாசபதி பற்றிய அறிமுகத்தை நிறைவு செய்து கொண்டு அவரின் நினைவுகளை மீட்க முயல்கிறேன்.

1959 அல்லது 60 என்று நினைக்கிறேன். கரவெட்டி வாணி கலைக்கழகத்திலே பண்டிதர் க.வீரகத்தி தொல்காப்பியருக்கு மூன்று நாட்கள் விழா எடுத்தார். நான் அப்பொழுது பள்ளி மாணவன். பேச்சுக்கள், பிரசங்கங்கள், பட்டிமன்றம், கவியரங்கு முதலியவற்றைக் கேட்பதில் அதிபிரியத்தோடு இருந்த காலம். ஒரு நாள் விழாவுக்குப் பிரதம விருந்தினராகத் தினகரன் பிரதம ஆசிரியர் க.கைலாசபதி வந்திருந்தார். வெள்ளை வேட்டி, வெள்ளை நஷனல், நல்ல உயரம், ஆஜானுபாகுவான அவர் எழுந்து பேசத் தொடங்கினார். பேச்சு முழுவதும் விளங்கக் கூடிய பக்குவம் அப்போது எனக்கு இல்லை. எல்லோரும் அமைதியாக இருந்து செவிமடுத்ததை மட்டும் கண்டேன். கைலாசபதியை நான் தரிசித்த அந்த முதற்காட்சி அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் என் உள்ளக் கிழியில் இன்றும் உயிரோவியமாய் இருக்கிறது.

1976ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி காலை யாழ்ப்பாண வளாகத்துக்குள் காலடி வைக்கிறேன். யாழ்.வளாகத்தின் இரண்டாவது அணி மாணவன் நான். 1975ஆம் ஆண்டு மாணவர்களும் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து உள்வாங்கப்பட்ட மாணவர்களும் கம்பீரமாக உலா வருகிறார்கள். அவர்கள் தாம் சிரேஷ்ட மாணவர்கள் என்ற அதிகாரத்தையும் காட்டத் தவறவில்லை. புதிய மாணவர்களுக்கான கூட்டம் ஆரம்பமானது. சிங்கள, தமிழ் விரிவுரையாளர்கள் பல்கலைக்கழக நடைமுறை பற்றி ஆங்கிலத்திலே உரையாற்றுகிறார்கள். வளாகத் தலைவர் முதலிலே ஆங்கிலத்தில் உரையாற்றுகிறார். தமிழிலேயும் உரையாற்றுகின்றார். சிங்கள, இஸ்லாமிய, தமிழ் மாணவர்களால் இராமநாதன் மண்டபம் நிரம்பியிருந்தது. கைலாசபதியின் உரையைக் கேட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இது. இவரிடம் படிக்க வேண்டும் என்ற எண்ணம் அன்றே எனக்கு உண்டானது.

நான் பல்கலைக்கழகம் வருவதற்கு முன்னரே இவரது கட்டுரைகள் சிலவற்றையும் இவரைப் பற்றிய பல கட்டுரைகளையும் சில நூல்களையும் படித்திருக்கிறேன். அக்காலத்திலே நான் இரசித்துப் படித்த எழுத்தாளரிலே ஒருவரான எஸ்.பொ. இவரைப் பற்றித் தாறுமாறாய் எழுதியவை எல்லாவற்றையும் படித்திருக்கிறேன். அவை பற்றியெல்லாம் பிற்காலத்தில் அவருடன் உரையாடியும் இருக்கிறேன்.

முதலாம் ஆண்டிலே ஒரு சில அதிதி விரிவுரைகள் எடுத்தார். இரண்டாம் ஆண்டு, தமிழ் சிறப்பு ஆரம்ப வகுப்பு, ஐந்து பெண் பிள்ளைகள், நான் ஒருவன் மட்டும் ஆண் தமிழ்ச்சிறப்பு வகுப்புக்கு அவர் முதல்நாள் வந்து வகுப்பெடுத்தமை நாற்பத்தைந்து வருடங்களுக்குப் பின்னும் இன்றும் பசுமையாக நினைவிருக்கிறது. வகுப்புக்கு வந்த முதல் நாள் மாணவர்களைப் பார்த்து நீங்கள் என்னென்ன நூல்கள் வாசித்திருக்கிறீர்கள் என்று ஒவ்வொருவரையும் கேட்கிறார். என்முறை வந்தது.

மற்ற மாணவிகள் அவ்வளவு பெரிதாக ஒன்றும் சொல்லவில்லை. நான் சற்றுத் துணிவாக டாக்டர் மு.வ., நா.பார்த்தசாரதி, அகிலன், காண்டேகரின் கா.ஸ்ரீ.ஸ்ரீ மொழிபெயர்ப்பு நாவல்கள் என்று வரிசையாக அடுக்கிக் கூறினேன். நல்லது பொன்னீலனை வாசித்திருக்கிறீரா? அசோகமித்திரனை வாசித்திருக்கிறீரா? தாய் மொழிபெயர்ப்பு நாவல் வாசித்திருக்கிறீரா? என்று கேட்டார். அவற்றை வாசிக்கவில்லை என்று தலையாட்டிக் கொண்டே கூறினேன்.

"அவற்றையும் வாசியும்" என்று கூறிவிட்டு பழைய இலக்கியங்களிலே எவற்றிலே உமக்கு விருப்பம் என்று கேட்டார். இராமாயணம், கலிங்கத்துப்பரணி, நளவெண்பா என்று கூறியதாக நினைவு. பாரதியைப் படித்திருக்கிறீரா? என்று கேட்டார். ஓம்! பல தடவை படித்திருக்கிறேன். நல்லது. கண்ணாடியை ஒரு தடவை உயர்த்தி என்னைப் பார்த்து விட்டு சரி. இனிப் படிப்போம் எனத் தொடங்கினார். ஒரு வகையில் இது எனக்கு நிகழ்ந்த ஒரு நேர்முகப் பரீட்சையாகவே இருந்தது. பாடநேர அட்டவணைப் படியும் பாடத்திட்டப்படியும் வகுப்புக்கள் நடைபெற்றன. பலர் கற்பித்தார்கள். அவர்களைப் பற்றியும் அவர்களின் கற்பித்தல் பற்றியும் பிறிதோர் இடத்திலே நினைவு கூருவோம்.

கைலாசபதியைத் திறனாய்வாளராக, மாக்சிய விமர்சகராக, முற்போக்குச் சிந்தனையாளராக, சமூகவியல், மானுடவியல் ஆய்வாளராக பத்திராதிபராக, பழந்தமிழ் இலக்கிய ஆய்வாளராக, நிர்வாகியாக எனப் பல்வேறு கோணங்களிலே அவரது பணியைப் பற்றிப் பலர் ஆய்வு செய்திருக்கிறார்கள்.

(தொடரும்...)

பேராசிரியர்
எஸ்.சிவலிங்கராஜா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பேரிடரில்...

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 607 ஆக உயர்ந்துள்ளது. 214 பேர் காணாமல் போயுள்ளனர்.

43,715 குடும்பங்களைச் சேர்ந்த 152,537 பேர் நாடு முழுவதும் உள்ள 1,211 பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## யாழ்.மாநகர...

விவாதத்தின் பின்னர் வரவு -செலவுத் திட்டம் சபை அங்கீகாரத்துக்கு விடப் பட்டது.

இதன்போது ஆதரவாக 23 வாக்கு களும் எதிராக 21 வாக்குகளும் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் வரவு செலவு திட்டம் ஏற்றுக்கொள் ளப்பட்டது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 13 உறுப்பினர்களும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலா 4 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலா ஒரு உறுப் பினர்களும் என 23 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 11 உறுப்பினர்களும் தேசிய மக்கள் சக்தியின் 10 உறுப்பினர்களு மாக 21 உறுப்பினர்கள் வரவு செல வுத் திட்டத்துக்கு எதிர்த்து வாக் களித்திருந்தனர். (ம-7,33)

## 2026ஆம்...

2026ஆம் ஆண்டுக்கான ஒதுக் கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு அல்லது வரவு செலவுத் திட்ட உரையை கடந்த நவம்பர் 7ஆம் திகதி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச் சராக ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க பாராளுமன்றத்தில் சமர்ப் பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 3 வாரங்களுக்...

மூன்று வாரங்களுக்குள் நிறைவடைய வேண்டும் என பிரதமர் ஹரிணி அமர சூரிய உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற மேல் மாகாண கழிவு மேலாண்மைக் குழு வின் கூட்டத்தின்போதே பிரதமர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கெரவலப்பிட்டியில் நில மேம்பாட்டுக் கழகத்திற்குச் சொந்தமான ஐந்து ஏக்கர் நிலம் இதற்காக ஒதுக்கப்பட் டுள்ளதால், தற்போது குவிந்து கிடக் கும் கழிவுகளை சிரமமின்றி அகற்ற முடியும் என முடிவெடுக்கப்பட்டுள் ளது.

பிரதமர் அலுவலகத்தின்படி, இந்த நிலத்தில் சேமிக்கப்படும் கழிவுகளை முறையாக அகற்றுவதற்கு தொடர் புடைய நிறுவனங்களும் ஒப்புக்கொண் டன. (ம-7)

## கனடாவில்...

தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் வடமராட்சி வதிரியைச் சேர்ந்த ஆயுஸ்மன் (வயது-19) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார். (ம-7)

## உள்ளக...

யாழ்ப்பாணம் பழைய பூங்கா பகுதியில், 12 பரப்பளவு காணியைக் கைய கப்படுத்தி அதில் உள்ளக விளை யாட்டரங்கினை விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் சுமார் 370 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்க கடந்த 23ஆம் திகதி விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், பாராளு மன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீ பன் ஆகியோர் அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

இந்நிலையில் , பழைய பூங்காவில் நூற்றாண்டு கால பழைமையான மரங் கள் காணப்படும் நிலையில், அவற்றை அழித்து உள்ளக விளையாட்டரங்கு அமைக்கக் கூடாது எனப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்

இந்நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் பழைய பூங்கா வில் அமையவுள்ள விளையாட்டரங் கினை உடனடியாக நிறுத்துமாறு கோரி வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வழக்கின் மீதான விசா ரணை நேற்று வெள்ளிக்கிழமை மன் றில் எடுத்துக்கொள்ளப்பட்டவேளை மைதானம் அமைக்கும் பணிகளை உடன் நிறுத்துமாறு 14 நாட்களுக்கு இடைக்கால தடை கட்டளையை வழங்கிய மன்று எதிர்த் தரப்பினை தமது ஆட்சேபனைகள், பதில்களை முன்வைக்கவும் காலம் வழங்கியுள் ளது. (ம-7,33)

# 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறு வனத்தினால் 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு தொடர்பான சிவப்பு எச் சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று (05) மாலை 4 மணிக்கு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள் ளது

கடந்த 24 மணித்தியாலங்களில் 150 மி.மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதால், சரிவு கள் இடிந்து விழுதல், பாறைகள் புரளுதல், நிலம் தாழிறங்குதல் மற்றும் மண்திட்டு சரிதல் போன்ற அபாயங்களிலிருந்து விலகிப் பாது காப்பான இடங்களுக்குச் செல்லு மாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறு வனம் சிவப்பு அறிவித்தல் மூலம் அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

## கிளி...

கிளிநொச்சி புன்னைநீராவிக் கிராமத்திலேயே குறித்த நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காய்ச்சலுக்கு தருமபுரம் பிர தேச வைத்திய சாலைக்கு சிகி ச்சை பெற சென்ற போது இவரின் குருதி மாதிரி பரி சோதனைக்காக அனுப்பி வைக் கப்பட்ட நிலையி லேயே எலிக் காய்ச்சல் இருப் பது இனங் காணப்பட்டது.

குறித்த நபர் யாழ்.போதனா வைத்தியசாலை யில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார். வெள்ள நிலை மையைத் தொடர் ந்து எலிக்காய்ச் சல் நோய் பரவும் அபாயம் உள்ள தாக சுகாதாரப்பிரி வினர் தொடர்ந்து அறிவுறுத்தி வரு கின்றமை குறிப் பிடத்தக்கது. (ம-7,316)

## யாழ்ப்...

திகதி இச்சம்ப வம் இடம்பெற் றுள்ளது.

இச்சம்பவத் தில் இராமச் சந்திரன் ஜெயந் தன் (வயது-32) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவரா வார்.

குறித்த இளை ஞனுக்கு திரு மணம் நடை பெற்று ஒரு வருடமேயான நிலையில் இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள் ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.12.05
சீட்டிழுப்பு இலக்கம் 6034
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
R 6 3 1 8 7 3

சுப தவசக்
திகதி 2025.12.05
சீட்டிழுப்பு இலக்கம் 0150
சிம்மம் 03 14 33 4051

தன நிதானய
திகதி - 2025.12.05
சீட்டிழுப்பு இலக்கம் - 2064
V 10 21 22 25 V

மெகா பவர்
திகதி 05/12/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2382
H 13 02 06 21 39

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4276
சீட்டிழுப்பு திகதி 05.12.2025
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 02 17 75 79
B

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.12.05
சீட்டிழுப்பு இலக்கம் 1343
மீனம் 12 14 19 44 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.12.2025 வெற்றி வாரம் 0742
ஆங்கில எழுத்து A
மற்றும் வெற்றி இலக்கம் 0 8 2 2 2 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,841,857.60
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3008
சீட்டிழுப்பு திகதி 2025.12.05 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 27 30 78 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,203,024.80

சனிதா
திகதி 05.12.2025 வெற்றி வாரம் 5169
வெற்றி இலக்கங்கள் 11 42 43 68 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,042,038.80
செகன்ட் சான்ஸ் ரூ. 50,000/-
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 838
சீட்டிழுப்பு திகதி 05.12.2025 வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 29 36
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,758,880.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4720
சீட்டிழுப்பு திகதி 05.12.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 36 39 44 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,078,308.40

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 26 18 39 43 73
சீட்டிழுப்பு வாரம் 2184
05.12.2025 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.611,008,037.00

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2834
சீட்டிழுப்பு திகதி : 2025.12.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,190,131.20
வெற்றி இலக்கங்கள் 04 21 73 76 G


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



## திருமதி லோசனாராணி சிவசேகரம்

**SLTS - I**

ஆசிரியர் பணியில்
36 வருடங்கள் சேவையாற்றி
05.12.2025இல்
ஓய்வுபெறும் திருமதி
**லோசனாராணி சிவசேகரம்**
ஆசிரியருக்கு
இனிய மணிவிழா
வாழ்த்துக்கள்

### சேவை விபரம்

**27.11.1989 - 01.02.1993**
யா/புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம்
**02.02.1993 - 31.12.1994**
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
**01.01.1995 - 31.12.1995**
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்
**01.01.1996 - 05.03.1998**
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்
**06.03.1998 - 31.08.2000**
கிளி/ செல்வாநகர் அ.த.க.பாடசாலை
**01.09.2000 - 09.07.2002**
கிளி/சிவபாதகலையகம் அ.த.க.பாடசாலை
**10.07.2002 - 11.02.2015**
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்
**12.02.2015 - 05.12.2025**
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்


Congratulations

வாழ்த்துவோர் - **ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கைதடி குருசாமி வித்தியாலயம்**

(6048)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 26 - 01 - 1962 | 29 - 11 - 2025 |



## வேலாயுதம் தயாபரன்

யாழ். அத்தாயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் தயாபரன் அவர்கள் கடந்த (29.11.2025) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னதம்பி வேலாயுதம் - வேலாயுதம் செல்வசரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் நவரட்ணம் - தெய்வபூமலர் தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலா அவர்களின் அன்புக் கணவரும் கபிலன், விவேதா, திவ்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் அநுராத மாலன் (கொத்தலாவல) அவர்களின் அன்பு மாமனாரும் தவமலர், வரதராஜா, நரேந்திரன், லோகேந்திரன், கிருஷ்ணவேணி, தவேந்திரன், காலஞ்சென்ற பவதாரணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நடேசன், பாலகிருஷ்ணன், சற்குருபரன், நாகேந்திரன், நகுலேந்திரன், பிறேமா, நளினி, யசோதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2025) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரும்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 905 7749

(C-4497)

# நாட்டில் மீண்டும் மழை

நாட்டில் நிலவும் வடகீழ் பருவப்பெயர்ச்சி காரணமாக எதிர் வரும் 9 ஆம் திகதி முதல் 3 நாட்களுக்கு மழைவீழ்ச்சி அதிக ரிக்கக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி வடக்கு, கிழக்கு, வட மத்திய, வடமேல் மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் பலத்த மழை பெய்வதற்கான சாத்தியங்கள் உள்ளன. இந்தக் காலப் பகுதியில் காற்றின் வேகமும் அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகம் அதுல கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)

தையல் தெரிந்தவர்கள் அல்லது தையல் கற்க ஆர்வமுள்ள பெண்கள் வரவேற்கப்படுகிறார்கள். நல்லூரினை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்கள் விண்ணப்பிப்பது விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் கீழ்க்காணும் இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளவும்.

**077 820 1525 / 076 624 2311**

(1763)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- இருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 1410725, 076 8226236
v2vacancies@gmail.com

(C-4500)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3580/- |
| 11-16 Kg | 2610/- |
| 21-22 Kg | 2380/- |

- குறைந்த விலை - நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4500)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2170/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2300/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## பணிப்பெண் தேவை

அரசு கடமை புரியும் இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலை செய்ய 18 - 30 வயதுக்குட்பட்ட தங்கி நின்று கடமைபுரிய பெண் பணியாளர் தேவை.
சம்பளம் - 100,000/-
சனி, ஞாயிறு விடுமுறை வழங்கப்படும்.

**071 744 3185**

(1762)

## துப்பரவுத் தொழிலாளர் தேவை

கோண்டாவிலில் உள்ள கோவில் ஒன்றிற்கு துப்பரவுத் தொழிலாளர் தேவை.
வயது : 25 – 50

**075 759 9546**

(6072)

## பணியாளர்கள் தேவை

அன்பு சிறுவர் பராமரிப்பு நிலையம், கிளிநொச்சி.
♦ முகாமையாளர்
வயது 30 தொடக்கம் 55, A/L
♦ பராமரிப்பாளர்கள்
வயது 25 தொடக்கம் 55, O/L

**071 535 4500**

(1759)

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மாவடிச்சந்திக்கு மிக அருகாமையில் கள்ளி வீதி தொடக்கத்தில் 5 பரப்பும் 16 குழியும் உடைய காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்ட மற்றும் தோட்ட தேவைகளுக்கு பயன்படுத்தலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 728 6164**

(6075)

## Voyzant இந்தியா கோவில்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆறுபடை வீடு | திருப்பதி | திருநாகேஸ்வரம் | இராமேஸ்வரம் |
| சிதம்பரம் | ஸ்ரீரங்கம் | வைத்தீஸ்வரன் | மேல்மருவத்தூர் |
| திருவண்ணாமலை | மதுரை மீனாட்சி | திருவெண்ணெய்நல்லூர் | சங்கரப்பாணி |
| திருவானைக்கா | காஞ்சிகாமாட்சி | ராமர்கோவில் | திருக்கடவூர் |

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்
**189,000/=** (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு)
இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து – தங்குமிடம்
10 நாட்கள்
மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd
புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

(C-4492)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 200/= | Max 1Kg |
| 1Kg சிவப்புப் பருப்பு | - 235/= | Max 1Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 270/= | Max 3Kg |
| 1Kg கோதுமை மா | - 150/= | Max 5Kg |
| 1Kg றவை | - 286/= | Max 2Kg |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 237/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 197/= | Max 2Kg |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2690/= | Max 01 |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 255/= | |
| 1Kg பயறு | - 660/= | |
| 750ml New vsp நல்லெண்ணை | - 1250/= | ~~1300/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. **0777 8080 30**

(1768)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல 191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org